தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
1987 ஏப்ரல் 3, வெள்ளிக்கிழமை,
பங்குனி 20, அக்ஷய–திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்''.

நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கிராம நிர்வாக அலுவலர்கள்.

262—(*வினா எண் 842) திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்திய கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் தேர்வு பெற்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 150-க்கும் மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் இன்னும் வேலையில் அமர்த்தப் படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 76 பேர்களே உள்ளனர்.

(ஆ) இம்மாவட்டத்தில் காலி பணியிடங்கள் 8 மட்டுமே உள்ளதால் மீதமுள்ள நபர்களை பணியிடங்கள் காலியாக உள்ள பிற மாவட்டங்களில் நியமனம் செய்யலாமா என்பது குறித்து தமிழ்நாடு தேர்வாணையத்துடன் கலந்து முடிவெடுக்க வேண்டி உள்ளது. இவர்களுக்குக் கிராம நிருவாக அலுவலருக்கான பயிற்சி அளிப்பது பற்றிய செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

[1987 ஏப்ரல் 3

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்வதற்கான ஒப்புதலை அளித்திருக்கிறார்கள் அரசுக்கு. அவர்களுக்கு விரைவிலே பயிற்சி அளித்து, வேறு வட்டங்களிலாவது அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, அந்தக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதியும் நிச்சயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பல்வேறு மாவட்டங்களிலே மொத்தம் 359 பேர்கள் காத்திருப்போர் பட்டியலிலே இருந்து வருகிறார்கள். சில மாவட்டங்களிலே பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. சில மாவட்டங்களிலே காத்திருப்போர் பட்டியல் அதிகம் இருக்கிறது. ஆகவேதான் தேர்வாணைக் குழு வேறு மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு ஒத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் தேர்வாணைக் குழு அந்தந்த மாவட்டத்திற்கென்று தேர்ந்தெடுத்துத் தந்திருக்கிறது. இப்பொழுது காலியிடங்கள் 195 இருக்கின்றன; 359 பேர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். இசைவு தந்து 195 இடங்களிலும் போடலாம் என்று குறிப்பிடுவார்களானால், 195 பேர்களையும் போட்டு விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, மீதி உள்ளவர்கள் 164 பேர்கள் தான் வருவார்கள். காலி இடங்கள் வருகின்றபொழுது அவர்களை நியமிக்க வாய்ப்பு ஏற்படக் கூடும். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றிய செயற்குறிப்பு இருந்து வருகிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராசாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, காத்திருப்போர் பட்டியலில் உள்ள 195 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். காத்திருப்போர் பட்டியலில் மீதம் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி தரப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்வதோடு இப்பொழுது பணியாற்றுகின்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அந்த, அந்த தாலுகாவிலே வேலை தருகின்ற அளவுக்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காத்திருப்போர் பட்டியலுக்கு வேலை வாய்ப்பு தர தேர்வாணைக் குழு ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். வேறு எந்த மாவட்டங்களிலே காலி இடம் இருக்கிறதோ அந்தக் காலி இடத்திற்கு வேறு மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அனுப்புவதற்குத் தேர்வாணைக் குழு ஒத்துக் கொள்ள வேண்டும். அப்படி அனுமதி தருவார்களானால் இந்த

1987 ஏப்ரல் 3]

195 பேர்களை வேறு பல மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கலாம், அப்படி அனுப்பும் போது இந்தக் காத்திருப்போர் செல்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அந்த, அந்த தாலுகாவிலே தான் அவர்களைப் போட வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவார்களானால், அவர்கள் காத்திருக்க வேண்டியதைத் தவிர, எங்கேயும் காலி இடம் ஏற்படாது. மிகுதி இருப்பவர்களுக்குக் காலி ஏற்படும் போது தான் அவர்களை வைத்து அந்த இடங்களை நிரப்புகின்ற சூழ்நிலை ஏற்படக் கூடும். ஆகவே, தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்ததன் காரணமாக, அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு தந்து விட்டதற்குப் பிறகுதான் வேறு பட்டியல் தயாரிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுமே தவிர, அவர்களுக்குத் தராமல் மற்றவர்களுக்குத் தருகின்ற சூழ்நிலை ஏற்படாது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது தஞ்சை மாவட்டத்திலே 76 பேர்கள் வேலையில் அமர்த்தப்படாமல் இருப்பதாகவும் ஆனால் அந்த மாவட்டத்திலே 8 இடங்கள் காலியாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். அந்த 8 இடங்களைத் தாமதம் இல்லாமல் நிரப்புவதற்கு அரசு முன் வருமா? அதோடு மீதிபேர்களை தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலே சீனியாரிட்டி அவர்களுக்கு இருக்குமானால் முன்னுரிமை கொடுத்து வேறு மாவட்டங்களில் பணியில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதியிருப்போரின் பட்டியலில் 76 பேர்கள் இருக்கிறார்கள். காலியிடங்கள் எட்டு இருக் கின்றன. காலியிடங்கள் 8 இருப்பதன் காரணமாக 76 பேர்களில் காலியிடங்களை நிரப்புவதில் கடினம் இருக்காது. மிகுதியாக இருப்பவர்களை மற்ற இடங்களிலே அமர்த்துவதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படும். ஆகவே தேர்வாணைக் குழு அதை அனுமதித்ததற்குப் பிறகு அதைச் செய்யலாம்.

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ்.

263—(*வினா எண் 1335) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் எந்தெந்த பயிர்களுக்கு செய்யப்படுகிறது?

(ஆ) மதுரை மாவட்டத்தில் எந்தெந்த பகுதியில் இது அமல்படுத்தப்படுகிறது?